## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## O.S.No.44/2017

## சாட்சியின் சான்றுரை DW-2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கர்ணன் (எ) கருணாநிதி | வட்டம் | - | |
| த/பெ | - | சுப்பிரமணியன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

18.10.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
பிரதிவாதி சாட்சி 2 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

என் சகோதரி பெயர் மீனாட்சி. அவர் கணவர் பெயர் ஏழுமலை என்றால் சரிதான். நான் போட்டுள்ள அடமான பத்திரம் சகோதரியின் கணவர் ஏழுமலையின் பெயரில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சகோதரியின் கணவர் பெயரில் அடமானம் போடும் போது பவுனாம்பாள் எங்கிருந்தார் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. மேல்முறையீடு வழக்கு 18/1995 தள்ளுபடி ஆகிவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றும் அதில் எனக்கோ என் சகோதரருக்கோ உரிமையானது என்று தீர்ப்பாகவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் எனக்கு பட்டா கொடுத்தார்கள். நான் இல்லாத தீர்ப்பை பொருத்து ஒரு அடமானம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது வாக்குமூலத்தில் 4½ சென்ட் சபாபதிக்கு பாத்தியமானது என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. அந்த வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தாக்கல் செய்தேனா என்றால் நான் படித்து பார்த்தேன். அவ்வாறு வாசகம் இல்லை. என் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சபாபதிக்கு பாத்தியமானது என்று சொல்லிவிட்டு

அடமானம் போட்டிருப்பது அதற்கு முரணானது என்றால் சரியல்ல. தற்போது எனது மகன் பிரசன்னா பெயரில் தான செட்டில்மண்ட் எழுதி கொடுத்துள்ளேன் என்றும் அவ்வாறு அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன. வழக்கு சொத்து வாதிக்கும் 1முதல் 8 பிரதிவாதிகளுக்கும் பாத்தியமானது என்றும் எனக்கும் 1வது பிரதிவாதிக்கும் பாத்தியமானது இல்லை என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் எந்த தேதியில் எழுதி வைத்தேன் என்றால் 2002ல் எழுதி வைத்தேன். தேதி தெரியவில்லை. அந்த தான செட்டில்மண்ட்டில் காலிமனை என்று எழுதி உள்ளது என்றால் சரிதான். அப்போது அது காலி மனையாக தான் இருந்தது. எனது பணிபலன்களை கொண்டு வீடு கட்டினேன். வாக்குமூலத்தில்12.06.1948ல் நாராயணகவுடண்ருக்கும் 05.02.1964ரல் வெத்தலை கவுண்டருக்கும் குத்தகை ரசீது எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேலும் எனது வாக்குமூலத்தில் சொத்துக்கள அனுபவ பாத்தியத்தை சித்தித்தவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றும் மற்றும் நான் பாகம் மூலமாகவோ கிரையம் மூலமாகவோ உரிமை கேட்கவில்லை என்றால் சரிதான். 1896 மார்ச் மாதத்திலிருந்து எனது தாத்தா தான் அனுபவத்து வருகிறார். 1896லிருந்து அனுபவித்து வருவதற்கு ஆவணம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி 1 முதல் 7 வரை குறுக்குவிசாரணை**

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் வழக்கறிஞர் தயாரித்ததில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் பயிர்செய்கிறேன். தொழில் செய்கிறேன். அந்த இடத்தில் தொழில் செய்கிறேன் என்பதற்கு அனுமதி வாங்கி அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

அனுமதி வாங்கியுள்ளேன் ஆனால் தாக்கல் செய்யவில்லை. முதலில் குலத்தொழில் செய்தோம். நான் தொழில் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு பாத்தியமானது என்பதற்கு கிரைய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற தீர்ப்பு எங்களுக்கு சாதகமாக உள்ளது மற்றும் அடமான பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அடமான பத்திரம் என்பது சொத்து உரிமையை நிரூபிக்கும் ஆவணம் இல்லை என்றும் அது நான் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேல்முறையீடு வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. தீர்ப்புரையில் என்ன சொல்லியுள்ளார் என்ற முழு விவரம் தெரியாது என்றால் ஓரளவிற்கு தெரியும். எங்களுக்கு தீர்ப்பு என்று தெரியும். அடமான பத்திரங்கள் தீர்ப்புக்கு பிறகு எங்களால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேல்முறையீட்டில் வழக்கு சொத்துக்கள் எனக்கு பாத்தியமானது என்று எந்த தீர்ப்பும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு சாதகமாக தான் வழங்கப்பட்டது. அடமானம் பத்திரம் எழுதி கொடுத்த ஏழுமலை என்பவரை கூட்டிவந்தால் உண்மை நிலவரம் தெரியும் என்றால் சரிதான். என் மகன் பெயருக்கு ஏற்படுத்திய ஆவணம் எந்த வருடம் என்றால் என் பாகசொத்தை பொருத்து அவர்களுக்கு செட்டில்மண்ட் எழுதி வைத்தேன். 2002ல் எழுதி வைத்தேன். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. செய்துள்ளேன். சபாபதி ஆச்சாரி கிரையம் வாங்கினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் சொல்லவில்லை. சபாபதி கிரயம் வாங்கிய சொத்தா என்றால் எனக்கு தெரியாது. என்து விசாரணை வாக்குமூலத்தில் இரண்டாவது பக்கத்தில் சபாபதி ஆச்சாரி கீழ் பாகத்தில் 4½ சென்டும் மேல்பாகத்தில் வேலாயுதம் ஆச்சாரி 4½ சென்ட் நிலத்தையும் அனுபவித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவர்கள் எந்த காலத்திலும் சொத்தை அனுபவிக்கவில்லை. நான் எனது முதல் விசாரணையில் அவ்வாறு சொல்லிவிட்டு

தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு பாகம் வந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை எங்களுக்குள் பாகம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பட்டா உள்ளது. வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் வேலாயுதம் ஆச்சாரி என்ற ஒரு நபரே இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் பல நூற்றாண்டுகளா சொத்தை அனுபவித்து வருகிறோம். எங்களுக்கு பூர்விகம் விக்கிரவாண்டி என்றால் சரியல்ல. சாலை அகசரம் எங்கள் பூர்விகம். எங்கள் தாத்தா காலத்திலிருந்து நாங்கள் அங்கு தான் இருக்கிறோம். என் தாத்தாவிற்கு அனுபவ பாத்தியம் என்றால் சரிதான். கிரைய பாக்கியம் இல்லை என்றால் சரிதான். வேலாயுதம் ஆச்சாரி, சங்கர் ஆச்சாரி, தர்மலிங்க ஆச்சாரி, சாமி ஆச்சாரி ஆகியோர் சபாபதி ஆச்சாரியின் உடன் பிறந்தவர்கள் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் கல்வெட்டு உள்ளது. 1933ல் என் பாட்டியும் தாத்தா வேலாயுத ஆச்சாரியும் அடக்கம் செய்த சமாதி வழக்கு சொத்தில் உள்ளது. வாக்குமூலத்தில் சகோதரர்கள் 5 பேருக்கு பாத்தியமானது என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. வாக்குமூலத்தில் நான் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றும் தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் அவருக்கு பாத்தியமானது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு பாகம் கிடைப்பதற்கு நான் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். வழக்கு சொத்தில் எனக்கும் 9,10வது பிரதிவாதிகளுக்கு எந்தவித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. தாவாப்படி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.